

அருப்புக்கோட்டையில் நகராட்சி 1வது வார்டுக்கு உட்பட்ட முனியப்பசாமி கோவில் தெருவில் 13 லட்சத்தில் கட்டப்பட்ட ரேசன் கடையை வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் திறந்து வைத்தார். உடன் நகர் மன்ற தலைவர் சுந்தரலட்சுமி சிவப்பிரகாசம், சேர்மன் சுப்புராஜ், நெசவாளர் அணி மாநில செயலாளர் பழனிச்சாமி, இளைஞர் அணி பாபுஜி, நகர தி.மு.க. செயலாளர் ஏ.கே.மணி ஆகியோர் இருந்தனர்.

### கால்நடைத் துறை சார்பில் ஆம்புலன்ஸ்கள் வழங்கல்!

# கால்நடையையும் மனிதநேயத்துடன் நடத்துகிறார் முதல்வர்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேட்டி!



சிவகங்கை, செப்.4-

சிவகங்கை மாவட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கால்நடை துறையின் சார்பில் கால்நடைக்கான 8 ஆம்புலன்ஸ்கள் அர்ப்பணிப்பு விழா மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் நடைபெற்றது.

இந்த எட்டு ஆம்புலன்ஸ்களை கொடியசைத்து கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பொதுமக்களின் பயன்பாட்டுக்கு அர்ப்பணித்தார். அதனைத் தொடர்ந்து அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

தமிழகத்தில் தலைவர் முதல்வர் தளபதி அவர்கள் மூன்று ஆண்டுகளாக நல்லாட்சி நடத்தி வருகிறார். அந்த நல்லாட்சியில் அனைத்துத் துறையினரும் பல்வேறு தரப்பட்ட மக்களும் பயன் அடைந்து வருகிறார்கள். ஒவ்வொரு துறையும் போட்டி போட்டுக் கொண்டு வளர்ச்சி பெற்று வருகிறது. மனிதநேயத்துடன் மனிதர்களை போல கால்நடைகளையும் ஒன்றாக முதல்வர் பாவித்து வருகிறார் என்பது இதன் மூலம் தெரிந்து கொள்ள முடியும் கூட்டுறவு சங்க தேர்தலில் உறுப்பினர்கள் சேர்க்கை குறித்த பணிகள் நடைபெற்று வருகின்றது. ஏற்கனவே பாராளுமன்றம், சட்டமன்றத்திற்கு, உள்ளாட்சிக்கு தேர்தல் ஆணையம் உள்ளது போல் கூட்டுறவு சங்க தேர்தலை நடத்திட தனியாக தேர்தல் ஆணையம் உள்ளது .அகில இந்திய அளவில் கூட்டுறவு சங்க உறுப்பினர் பணிகள் துவங்கியதும் தமிழகத்திலும் கூட்டுறவு தேர்தல் நடத்துவது குறித்த அறிவிப்புகள் வெளிவரும் . கடந்த மூன்று ஆண்டுகளில் பல்வேறு தொழில்கள் துவங்கப்பட்டு முதலீடுகள் தமிழகத்திற்கு வந்துள்ளது. தற்போது அமெரிக்கா சென்றுள்ள முதல்வர் அவர்கள் பல்வேறு தொழில் புரிந்துணர்வுனர் ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சி யான செய்திஆகும். அதைவிட இதனால் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பது ஒரு மகிழ்ச்சி யான செய்தியாகும்.

இதில் மிகவும் மகிழ்ச்சி தரக்கூடிய விஷயம் என்ன வென்றால் முதல்வரை அமெரிக்காவில் வரவேற்றது நமது மாவட்டத்தை சார்ந்த முன்னாள் அமைச்சர் செ. மாதவனின் மகள் வெற்றிச் செல்வி தலைமையில் தமிழர்கள் அங்கு வரவேற்றது நமக்கு கூடுதலாக மகிழ்ச்சியை தந்து உள்ளது.

இவ்வாறு அமைச்சர் கேஆர். பெரிய கருப்பன் கூறினார் .

இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆஷா ஆஜித், எஸ். மாங்குடி எம்.எல்.ஏ மாவட்ட கழக துணை செயலாளர் பேரூராட்சி மன்ற தலைவர் த.சேங்கை மாறன், சிவகங்கை நகர்மன்ற தலைவர் சி.எம்.துரை.ஆனந்த், நகர் மன்ற துணை தலைவர்எம். கார்கண்ணன் ஆகியோர் இருந்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் மருத்துவர் ராமச்சந்திரன், துணை இயக்குனர் மருத்துவர் முகமது கான், உதவி இயக்குனர்கள் மருத்துவர் ராம்குமார், மருத்துவர் பால கிருஷ்ணன் மருத்துவர் தங்கமுத்து மருத்துவர் ஜெயப் பிரகாஷ், மருத்துவர் ஜான் சுரேஷ் தாசன் மற்றும் துறை அலுவலர்கள் பல்வேறு அதிகாரிகள். ஒன்றிய செயலாளர்கள் திருமலை முத்துராமலிங்கம், எம்.ஜெயராமன், தொ.மு.ச.முருகேசன்,,ஒன்றிய துணைச்செயலாளர் முத்துகுமார், ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர் சிங்கமுத்து புதூர் கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

### ஆர்.வினோத் காந்தி - வி.எல்.ஜோதி - கழகத்தினர் பங்கேற்பு!

# அரக்கோணம் நகரக் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம்!

## இராணிப்பேட்டை ஆர். காந்தி சிறப்புரை!

இராணிப்பேட்டை, செப்.4-

இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் நகர திமுக சார்பில் நடைபெற்ற பொது உறுப்பினர்கள் கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிப்பேட்டை ஆர்.காந்தி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு வருகின்ற சட்டமன்ற தேர்தலில் மகத்தான வெற்றி பெற அனைவரும் உழைக்க வேண்டும் என்று சிறப்புரையாற்றினார்.

இந்நிகழ்ச்சியில் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி, அரக்கோணம் நகர கழக செயலாளர் வி.எல்.ஜோதி மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மு.கண்ணையன், மாவட்ட துணைச் செயலாளர் மு.சிவானந்தம், என்.ராஜ்குமார், லட்சுமி பாரி, எ.கலாவதி , துரை சீனிவாசன், கோ.வ.தமிழ்வாணன், எ.அன்பு லாரன்ஸ், நந்தாதேவி, ரமேஷ்பாபு, அரிகிருஷ்ணன், ஆர்.கே.லிங்கம், ரவிச்சந்திரன் தமீன் அன்சாரி பால கிருஷ்ணன், மாவட்ட அமைப்பாளர்கள் எம்.கே.சிவா எஸ். பிரசாத், வேதா சீனிவாஸ், பிஎல்டி.சிவா தொன் போஸ்கோ ஜி. ஜெனிஸ்குமார் டி.அந்தோணி மற்றும் மாவட்ட நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.




இராணிபேட்டை மாவட்ட தி.மு.க. பொது உறுப்பினர்கள் கூட்டம், மாவட்ட கழக அவைத்தலைவர் ஏ. கே.சுந்தரமூர்த்தி தலைமையில், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர். எஸ்.ஜெகத்ரட்சகன், மாநில சுற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி மற்றும் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல்.ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ. முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளராக இராணிப்பேட்டை மாவட்ட கழக செயலாளரும், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சருமான இராணிபேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மு.கண்ணையன், க.சுந்தரம், அ.அசோகன், கலைமணி, மாவட்ட துணைச் செயலாளர்கள் மு.சிவானந்தம் எம்.சி., துரை மஸ்தான், குமுதா குமார், ஜி.கே.குழுமம் சந்தோஷ்காந்தி மற்றும் மாவட்ட கழக நிர்வாகிகள், நகர ஒன்றிய செயலாளர்கள் ,பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், ஊர்கிளை, உட்கிளை, வட்ட கிளை செயலாளர்கள், BLA 2 மற்றும் உள்ளாட்சி மன்ற நிர்வாகிகள் சிறப்பு அழைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

# ஒன்றிய அரசே மாணவர்களிடையே புரட்சித் தீயை கிளப்பாதீர்!

ஒன்றிய மைனாரிட்டி பா.ஜ.க. அரசு தமிழ்நாட்டை வஞ்சிக்கும் செயலில் கிஞ்சிற்றும் மாற்றமில்லாமல் இருப்பதை தொடர்ந்து வெளிப்படுத்தி வருகிறது. மாறாதைய்யா மாறாது மோடியின் மனமும் குணமும் மாறாது என்று பேசவைக்கிற விதத்தில் தான் ஒன்றிய அரசின் ஆட்சி, ஓரவஞ்சனை ஆட்சியாக இருக்கிறது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு 100 ரூபாய் நாணயத்தை வெளியிட்டு ஒன்றிய அமைச்சர் ராஜநாத் சிங் சென்னையில் நடந்த நிகழ்ச்சியில் பேசிய பேச்சு பா.ஜ.க.வில் சில நல்ல பண்பாளர்களும் நல்ல அரசியல் வாதிகளும் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியது. அந்தளவிற்கு அவர் கலைஞர் அவர்களைப் பற்றி சிறப்பாக பேசினார். அந்த நிகழ்ச்சிக்கே சிறப்பு சேர்த்தார்.

உடனே எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களெல்லாம் பொறாமையின் உச்சத்திற்கே சென்று ராகுல் காந்தியை ஏன் அழைக்கவில்லை? சோனியா காந்தியை ஏன் அழைக்கவில்லை? தி.மு.க.விற்கும் பா.ஜ.க.விற்கும் மறைமுகமான உறவு உள்ளது என்றெல்லாம் பொய் குண்டுகளை வீசி, அவை அரசியலில் வெடிக்கப் போகும் அணுகுண்டுகளாக அவிழ்த்து விட்டனர். ஆனால் அந்த குண்டால் எந்த பாதிப்பும் எவருக்கும் ஏன் கழகத்திற்கும் நிகழவில்லை. ஏமாந்து போனார்கள்.

ராகுல் காந்தியையும், திருமதி.சோனியா காந்தி அவர்களையும் எந்தந்த நிகழ்ச்சிகளுக்கு அழைக்க வேண்டுமோ அவற்றிற்கு அழைத்து தமிழ்நாடு முதல்வர் கௌரவப்படுத்தியுள்ளார் என்பதை உலகமே அறியும்.

அதை விடுத்து அரசியல் ஆதாயம் அடைவதற்காக எதை வேண்டுமானாலும் ஒரு பொறுப்புள்ள அரசியல் தலைவர்கள் பேசுவது அநாகரிகமாகும். இவர்களுக்கு ஏன் ராகுல் காந்தி மீதும் திருமதி. சோனியா அம்மையார் மீதும் இவ்வளவு அக்கறை?

பா.ஜ.க மைனாரிட்டி அரசும் சரி அதற்கு முன்பிருந்த பா.ஜ.க அரசும் சரி தொடர்ந்து தமிழ்நாட்டு அரசை ஒரு ஆளுநரை வைத்து பல தொல்லைகளை தொடர்ந்து கொடுத்து வருவது நாடு நன்கறியும். அதோடு மட்டுமின்றி பேரிடர் மற்றும் கடுமையான வெள்ளத்தால் உறவுகள், பிள்ளைகள் மற்றும் வீடிழந்து, மாடுஇழந்து, ஆடிழந்து பல்லாயிரக்கணக்கான கோழிகளை இழந்து அனாதையாக நின்ற கோரமான காட்சியை கண்டோர், கண்கலங்காதோர் இல்லை. வாழ்வாதாரமே இழந்து வாழ்வின் இருட்டில் நின்றனர்.

இறந்தவர்கள் மீண்டதாக புராணங்களில் வேண்டுமானால் கதை இருக்கலாம் தமிழ் கடவுள் முருகனின் பக்தர் அருணகிரிநாதர் இறந்த பின்பு மீண்டும் முருகன் அருளால் உயிர் பெற்று பல அழகிய பாடல்களை பாடியதாக கூறுவோர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள். பகுத்தறிவுவாதிகள் எக்காலத்திலும் அதை நம்ப மாட்டார்கள். அது தனிமனித நம்பிக்கை அதற்குள் ஆழமாக செல்ல விரும்பவில்லை.

ஏன் இதனை எழுத வேண்டி வந்ததென்றால் உயிரிழுந்தவர்கள் வாழ்வாதாரமாக விளங்கிய ஆடுகள், மாடுகள், கோழிகள் அழுதாலும் கதறினாலும் மீண்டும் உயிரோடு கிடைக்குமா. அதற்காகத் தான் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு பறந்து சென்றார் நம் முதல்வர். உயிரிழுந்த மனிதர்களுக்கு, விலங்குகளுக்கு என்று தனித்தனியாக தரம் பிரித்து நிதியுதவி வழங்கி நிம்மதி இழந்து நின்ற மக்களுக்கு நிம்மதி அளித்தார் கலைஞர் மகன் முதல்வர் தளபதி.

ஏன் இதனை அழுத்தமாக குறிப்பிடுகிறேனென்றால் வாழ்வில் யாராலும் கண்டு கொள்ளப்படாமல் இருக்கும் மனிதர்கள் தான் பிச்சைக்காரர்கள். எல்லாம் இழந்தவர்கள் எதுவும் இல்லாதவர்கள் அவர்களை மனதில் நிறுத்தி அம்மக்களுக்கு நல்வாழ்வு கிடைக்க செய்ய பிச்சைக்காரர் மறுவாழ்வு திட்டம் தந்த மாமனிதர் உலகிலேயே எனக்குத் தெரிந்து கலைஞர் மட்டும்தான். ஜெர்மனியில் ஹிட்லர் ஆட்சி செய்யும் பொழுது பிச்சைக்காரர்களை கண்டால் சுட்டுக் கொல்லப்படுவார்கள் என்று பலர் கூற கேட்டு அதிர்ந்துள்ளேன்.

ஆனால் அவர்களையும் மதித்து அவர்களுக்கு மறு வாழ்வு கிடைக்க செய்த தலைவர் தான் கலைஞர். இப்படி எத்தனையோ திட்டங்கள் தந்த மனிதரின் புதல்வர் ஆளுமையில் வல்லவர்களுக்கெல்லாம் வல்லவர். அதனால் வெள்ளப் பாதிப்பில் சிக்குண்டு தவித்த தம்மக்களைப் பார்த்து அவர்களின் துயரில் பங்கெடுத்து அவர்கள் விழிகளின் கண்ணீரை விநாடியில் துடைத்திட்டார்.

அப்படி கடுமையாக பாதிக்கப்பட்ட போது ஒன்றிய அமைச்சர்கள் வந்தார்கள்! பார்த்தார்கள்! சென்றார்கள்! அதுவும் நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் என்ற தமிழ்ப்பெண். சென்றவர் சென்றவர் தான் டெல்லிக்குச் சென்றபின் ஒரு வார்த்தை தமிழ்நாட்டில் ஏற்பட்ட மழை சேதத்தைப் பற்றியோ பேரிடர் பாதிப்பை பற்றியோ பேசவில்லை. அவர்தான் நம் தமிழச்சியாம்.


மக்களிடம் வாக்கு வாங்கி அமைச்சராக வந்திருந்தால் மக்களின் உணர்வை அறிய முடியும். இவர் தான் மக்களையே சந்திக்காதவர் ஆயிற்றே! அப்படித்தான் இருப்பார். பா.ஜ.கவினர் வேண்டுமானால் நம் தமிழ் பெண் ஒன்றிய நிதி அமைச்சராக இருக்கிறார் என்று பெருமை பேசிக் கொள்ளலாம்.

அதற்காக நிவாரண நிதியை மக்களுக்கு தருவதற்கு தான் நம் முதல்வர் நேரடியாகவும், பொது நிகழ்ச்சி வாயிலாகவும் பிரதமர் மோடியிடம் பலமுறை கேட்டுப் பார்த்தார். அதுவும் கிட்டத்தட்ட ரூ.38000 கோடி தான். அதற்கு மோடி அரசு தந்தது எவ்வளவு தெரியுமா வெறும் ரூ.285 கோடி. இது நியாயமா? கர்நாடக அரசு கேட்டது ரூ.18000 கோடி ஆனால் வழங்கப்பட்ட நிதி ரூ. 3454 கோடி. குஜராத்தில் லேசான காற்று கொஞ்சம் வேகமாக அடித்தது அலறி அடித்து குஜராத் ஓடி ரூ.1000 கோடியை கேட்காமலேயே அள்ளிக் கொடுத்தார். மற்ற மாநிலங்களுக்கு ஏன் இப்படி கொடுக்கிறார்கள் என்று நாம் கேட்கவில்லை. அதை எதிர்க்கவும் இல்லை.

ஆனால் தமிழ்நாட்டை ஏன் இப்படி பகிரங்கமாக வஞ்சிக்கிறார் பிரதமர் மோடி? ஈவு இரக்கமே இல்லாத கொடூரமானவரா அந்த மனிதர், இருக்கலாம். அதனால் தான் 2 வருடங்களுக்கு மேல் எரிந்து கொண்டிருக்கும் மணிப்பூர் மாநிலத்தை இந்த நிமிடம் வரை பிரதமர் மோடி போய் பார்க்கவில்லை. போலந்து போகிறார். உக்கிரன் போகிறார் ஆனால் மணிப்பூர் மறுக்கிறார் இவர்தான் நம் பாரத பிதமராம். அதனால் தான் அங்குள்ள மக்கள் நடந்து முடிந்த தேர்தலில் 2 மக்களவைத் தொகுதிகளிலும் பா.ஜ.கவை தோற்கடித்து காட்டி தங்கள் வெறுப்பை வெளிப்படுத்தினர்.

தமிழ்இனமோ இமயம் வரை போர் நடத்தி சென்று பல வடஇந்திய மன்னர்களை வென்று இமயத்தில் புலிக்கொடி நட்ட இனம். இன்றைக்கு சிந்து சமவெளி நாகரிகம் என்பது திராவிட நாகரிகம் என்று சான்றோர்களால் கூறப்படுகிறது. அதையும் கூட இந்துத்துவா கும்பல் சிந்து சரஸ்வதி நாகரிகம் என்று மாற்ற முயற்சித்து வருகிறது. அதாவது சரஸ்வதி நதி என்ற சிறிய நதி ஓடியதாகவும் அதை ஒட்டி அந்த நாகரிகம் தோன்றியதாகவும் அது ஆரிய நாகரிகம் என்றும் கூற முற்படுகிறது.

திராவிடம் என்றால் தமிழர்கள் தான். அதனால் தான் அறிவார்ந்த அண்ணல் அம்பேத்கர் இந்தியா முழுமையும் ஆண்டவர்கள் தமிழர்கள் என்று கூறியுள்ளார். அப்படிப்பட்ட மானம் ரோஷமிக்க இனமென்பதால் தான் ஒன்றிய பா.ஜ.க அரசு தமிழகத்தை தொடர்ந்து பல வழிகளில் வஞ்சிப்பதைக் கண்டு அதற்காக கொள்கையை விட்டு கெஞ்சிடாது சிங்கமென நிமிர்ந்து உரிமையை கேட்கும் முதல்வர் தளபதி அவர்களுக்கு 40க்கு 40 தொகுதிகளிலும் வெற்றியைத் தந்தனர். பா.ஜ.கவிற்கு பலத்த அடியை தந்தனர். அண்ணாமலை கணக்கில்லா கோடிகளை அள்ளிக் குவித்தும் கொடுத்தும் கூட வெற்றி பெற முடியவில்லை அதற்குப் பிறகும் திருந்தினார்களா என்றால் திருந்தவில்லை.



**வி.பி.கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

இன்றைக்கு இந்தியாவிலேயே உயர்கல்வியில் முதல் மாநிலமாக திகழ்ந்து வருவது தமிழ்நாடு. நடந்து முடிந்த பத்தாம் வகுப்பு மற்றும் +2 தேர்வுகளில் பெற்ற வெற்றி 95 விழுக்காடு. அப்படி கல்வியில் சிறந்து விளங்கும் தமிழ்நாட்டை ஊக்கப்படுத்த வேண்டிய ஒன்றிய அரசு ஒடுக்கப் பார்க்கிறது. பந்தயக் குதிரை தமிழ்நாடு! சண்டிக் குதிரையோ, சங்கிகள் குதிரையோ அல்ல!

சமக்ர சிக்ஷா அபியான் திட்டத்தின்படி இந்த ஆண்டு தமிழ்நாட்டிற்கு கல்வி வளர்ச்சிக்கு தர வேண்டிய முதல் தவணை ரூபாய் 573 கோடி ஜீன் மாதமே தர வேண்டும் ஆனால் தரவில்லை முதல்வரும் தனது கண்டனத்தை தெரிவித்துள்ளார். கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் அவர்களும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதானை சந்தித்து கேட்டுள்ளார்.

ஆனால் தேசிய கல்வி கொள்கையில் இணைந்தால் மட்டுமே இந்தப் பணத்தை வழங்க முடியும் என்று கூறி தமிழக கல்வித்துறையை முடக்கிட முயல்கின்றனர். இந்தி மொழியை எப்படியும் திணித்து விட வேண்டுமென தீர்க்கமாக முடிவெடுத்து செயல்படுகின்றனர். முதல் தவணை தொகைக்கே இப்படி என்றால் மற்ற மூன்று தவணை தொகைக்கு என்ன பித்தலாட்டம் செய்யப் போகிறார்களோ?

இந்தியை எதிர்த்து தமிழ் மொழியை காத்திட நூற்றுக் கணக்கில் உயிர் விட்டவர்கள் தமிழர்கள் என்ற வரலாறு ஐ.நாவில் பேசப்பட்ட வரலாறு. இது மோடி அவர்களுக்கு தெரியாது, நிர்மலா அம்மையாருக்கும் தெரியாது. ஜெய்சங்கர் அப்போது எங்கிருந்தாரோ? அன்றைய பிரதமர் நேருவை உளுக்கிப் போட்டு அதிரவைத்து இந்தியை திணிக்க மாட்டோம் என்று கதற விட்டவர்கள் தான் தமிழர்கள்.

தற்போது அமைதியாக இருக்கிறோம் என்பதற்காக எப்போதும் அப்படியே இருப்போம் என்று ஒன்றிய அரசினரே எண்ணி விடாதீர்கள். ஒரே நாளில் ஜல்லிக்கட்டுக்காக திரண்ட கூட்டத்தைப் பார்த்தீரா? அது யார் சொல்லியும் கூடிய கூட்டம் அல்ல. அதேபோல் ஒரு நொடியில் புரட்சித் தீ பற்றத் துவங்கினால் அதை அணைப்பது அவ்வளவு எளிதல்ல. இந்தியை திணிக்க முயன்ற காங்கிரஸ் 1967ல் போனது திரும்பி வரவே முடியவில்லை. காங்கிரஸ்கே அப்படி நிலை ஏற்பட்டதென்றால் பா.ஜ.க தமிழ் மாணவர்களின் புரட்சித் தீயில் பொசுங்கி கருகிப் போகும் என்பதை எச்சரிக்கையாக எடுத்துக் கொள்ளுங்கள்.

எனவே ஒன்றிய அரசே! உடனே கல்விக்கான நிதியை தந்து விடுங்கள். நீங்கள் விளையாட நினைப்பது மாணவசமுதாயத்திடம். மாணவர்கள் திரண்டெழுந்தால் மன்னாதிமன்னனெல்லாம், ஏன் சர்வாதிகார சண்டியர்களெல்லாம் ஓட்டமெடுத்தது தான் வரலாறு. இந்த வரலாற்றை ஏற்கனவே எழுதியவர்கள் தமிழக மாணவர்கள். அதை அறிந்து புரிந்து அலட்சியப்படுத்தாமல் உடனே நிதியை தந்திடுங்கள். இந்தி எனும் பூகம்பத்திற்கே புறமுதுகு காட்டாதவர் மாணவர் குலம் உங்கள் பூச்சாண்டி மிரட்டலுக்கெல்லாம் மிரளாது. பிரதமர் நேருவையே மண்டியிட வைத்தவர்கள் தமிழ் மாணவர்கள். இன்றைய பிரதமர் மோடி நேருவை விட அறிவிலும் ஆளுமையிலும் சிறந்தவரா? இல்லையே! என்பது நாடு நன்கு அறியும்.

ஒன்றிய அரசுக்கு தமிழ்நாடு மாநில அரசு மண்டியிட்டு கிடக்கும் அடிமை அரசல்ல. எச்சரிக்கை! திருந்துங்கள் அல்லது திருந்த வைப்போம்.